[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

முன்வடிவும், 8-வது இனமான 1975 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவும் மற்றும் 9-வது இனமான 1975 ஆம் ஆண்டு, சட்ட மன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்) திருத்த சட்ட முன் வடிவும் முதலில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"மேலவை விதிகளின் 21 (3) விதியின்படி இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள இனம் இரண்டிலுள்ள சட்ட முன்வடிவுகளில் 5-வது இனமான 1975 ஆம் ஆண்டு, மாநில வக்ஃப் வாரியம் (தனியதிகாரியின் பணிகளைச் செய்திறனுக்குதல்) சட்ட முன்வடிவும், 6-வது இனமான 1975 ஆம் ஆண்டு, தனியார் மின் வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவும், 8-வது இனமான 1975 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவும் மற்றும் 9-வது இனமான 1975 ஆம் ஆண்டு, சட்ட மன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்) திருத்த சட்ட முன் வடிவும் முதலில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

4. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, மாநில வக்ஃப் வாரியம் (தனியதிகாரியின் பணிகளைச் செய்திறனுக்குதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1975.)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, மாநில வக்ஃப் வாரியம் (தனியதிகாரியின் பணிகளை செய்திறனுக்குதல்) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1975), ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

1954 ஆம் ஆண்டு வக்ஃபுகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 29/1954) 64-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ், தமிழ் நாடு மாநில வக்ஃப் வாரியத்தை 1967 நவம்பர் 29 ஆம் நாளிலிருந்து மூன்றுண்டுக் கால அளவிற்கு

@ 329–330 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1975 நவம்பர் 10] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

அரசு கலைத்தது. 1971 மே 25 ஆம் நாளிட்ட அறிவிப்பு ஒன்றின் மூலம் வாரியம் கலைக்கப்பட்ட காலம் 1971 மே 23-ஆம் நாள் வரையில் மேலும் நீட்டிக்கப்பட்டது. இந்த வக்ஃப் வாரியம் 1971 மே திங்கள் 24 ஆம் நாள் முதற்கொண்டு மீண்டும் அமைக்கப்பட்டது. வாரியத்தின் அதிகாரங்களைச் செலுத்தவும் கடமைகளைச் செய்யவும் நியமிக்கப்பட்ட வக்ஃபு தனி அதிகாரி, மேற்சொன்னவாறு 1967 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20 ஆம் நாளிலிருந்து 1971 ஆம் ஆண்டு மே திங்கள் 23 ஆம் நாள் முடிய உள்ள கலைப்பு நீட்டிக்கப்பட்ட காலத்திலும்கூட தொடர்ந்து மேற்சொன்ன அதிகாரங்களைச் செலுத்தியும் கடமைகளைச் செய்தும் வந்தார். அந்த வகையில் தனி அதிகாரி கலைப்பு நீட்டிக்கப்பட்ட காலத்திலும்கூட நீதிமன்றங்களின் முன் பல வழக்குகளைக் கொடுத்துள்ளார். 1971 மே 25 ஆம் நாளிட்ட மேற்சொன்ன அறிவிப்பு கடந்த ஒரு தேதியிலிருந்து செயல்படக் கூடியதல்லவாகையால், அது செல்திறன் உள்ளதல்ல என்னும் காரணத்தைக் காட்டி நீதி மன்றங்கள் மேற்சொன்ன வழக்குகள் சிலவற்றைத் தள்ளுபடி செய்துள்ளது. அதன் விளைவாக இந்த வழக்குகளைத் தொடுக்க தனி அதிகாரிக்கு அதிகார வரம்பு இராமற் போயிற்று. எனவே, வாரியம் கலைப்பு நீட்டிக்கப்பட்டிருந்த கால அளவில், தனி அதிகாரியின் செயல்கள் நடவடிக்கைகள் அனைத்தையும் செல்திறனுக்கவும் மேற்சொன்ன வழக்குகள் அல்லது நடவடிக்கைகளைத் தாக்கல் செய்யவும் அந்தத் தனி அதிகாரிக்கு எவ்வித அதிகார வரம்பும் கிடையாது என்னும் ஒரே காரணத்தைக் காட்டி தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகளையும் ஏனைய நடவடிக்கைகளையும் நீதிமன்றங்களில் மீண்டும் கொண்டு வர வகை செய்யவும் தேவை ஏற்பட்டுள்ளது. வக்ஃபு வாரியம், 1971 ஆம் ஆண்டு மே திங்கள் 24 ஆம் நாளிலிருந்தே மாற்றி அமைக்கப்பட்ட போதிலும்கூட அவ் வாரியத்திற்குப் புதிய செயலாளர் ஒருவர் 1971 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 12 ஆம் நாளன்று தான் நியமிக்கப்பட்டார். மேற்சொன்ன 24-5-1971 ஆம் நாள் முதல் 11-7-1971 ஆம் நாள் முடிய உள்ள கால அளவில் மேற்சொன்ன தனி அதிகாரி, வாரியத்தின் செயலாளருக்குள்ள அதிகாரங்களைச் செலுத்தினர். அக் கால அளவில் வாரியத்தின் செயலாளராக தனி அதிகாரி எடுத்துக் கொண்ட செயல்கள், நடவடிக்கைகள் ஆகியவை நீதி மன்றங்களில் ஆட்சேபிக்கப்படுவதைத் தவிர்க்க அச் செயல்கள் நடவடிக்கைகளுக்குச்

செல்திறன் அளிக்க வேண்டியது அவசியமெனக் கருதப்படுகிறது. இச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன நோக்கங்களை எய்த விழைகிறது. இதனை மேலவை ஏற்க வேண்டுமென முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, மாநில வக்ஃப் வாரியம் (தனியதிகாரியின் பணிகளைச் செய்திறனுக்குதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு துணைத் தலைவர வர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, மாநில வக்ஃப் வாரியம் (தனியதிகாரியின் பணிகளைச் செய் திறனுக்குதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1975) நிறைவேற்றப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, மாநில வக்ஃப் வாரியம் (தனியதிகாரியின் பணிகளைச் செய்திற னுக்குதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1975) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.